දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல )
My No. ) CF/EXD/04/2022

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය ) 2022.07. 18
திகதி )
Date )

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

பொதுச் சுற்றுநிருப இலக்கம் : 02 - 60/2022

மாகாண சுகாதார செயலாளர்கள்

பிரதிப் பணிப்பாளர் நாயகம் இலங்கை தேசிய வைத்தியசாலை

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்

மத்திய அமைச்சின் கீழ் வரும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,

பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,

உரிய திணைக்கள தலைவர்களும்,

**சுகாதார அமைச்சு (MT - 6) தரம் III செயற்கை அவயவ மற்றும் சார்பு உறுப்பு சிகிச்சையாளர்/நிபுணர் உத்தியோகத்தர்களுக்கான I வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2022 (இரண்டாம் தடவை)**

சுகாதாரம் மற்றும் சுதேசவைத்தியச் சேவைகள அமைச்சில் செயற்கை அவயவ தொழிநுட்பம் தரம் - III உத்தியோகத்தர்கள் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடைய முன்னர் சித்தியடைய வேண்டிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் திகதி இடம், நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படும்.

**02. தகைமைகள்**

செயற்கை அவயவ மற்றும் சார்பு உறுப்பு சிகிச்சையாளர்களர் /நிபுணர் உத்தயோகத்தர் தரம் - III ற்கு நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் செயற்கை அவயவ போதனாசிரியர் பதவியில் தரம் III இற்கு நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தர்களும் மாத்திரம் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**03 விண்ணப்பங்கள்**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி விண்ணப்பதாரர்களினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் அந்தந்த திணைக்களத் தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), பரீட்சைகள் கிளை, சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய" , இல 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு **2022.08.20** ஆம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலின் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பதாரியினால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் சரியானவையென பிரிவுத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தனது விண்ணப்பப் படிவத்துடன் சுய முகவரி எழுதப்பட்ட ரூபா 45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 9" x 4" அளவுடைய கடித உறைகள் ஒன்று அனுப்பப்படல் வேண்டும். (இக் கடிதவுறையில் விரும்பியவாறு அலுவலக

முகவரியை அல்லது தனிப்பட்ட முகவரியினை எழுதியனுப்பலாம்) தாமதமாகிப் பெறப்படும் விண்ணப்பங்களும், தவறான விண்ணப்பங்களும், முழுமையாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் எது வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

**கவனிக்கவும் :** மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பம் A4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தாயரிக்கப்படவேண்டும். முதற் பக்கத்தில் இலக்கம் 01 - 04 தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 05 - 09 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**04** பரீட்சைக் கட்டணம்

4.1 பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் விடயம் ஒன்றிற்கு ரூபா 25.00 பெறுமதியுடைய முத்திரையினை ஒட்டி அதன்மீது கையொப்பத்தினையும், திகதியினையும் இட்டு உரிய முறையில் மதிப்பு நீக்கம் செய்யப்படல் வேண்டும்.

4.2 இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது எக்காரணத்தினைக் கொண்டும் வேறு பரீட்சையொன்றிற்கு மாற்றவோ, மீள வழங்கப்படவோ மாட்டாது.

**05** பரீட்சைக்கு உட்படுத்திக் கொள்ளல்

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். அப் பரீட்சை அனுமதி அட்டைகளினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறின்றேல் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அளிக்கப்படமாட்டாது.

5.2 ஆண், பெண் பரீடசார்த்திகளினால் பரீட்சை நிலையத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தனது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) வலுவுடைய சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) வலுவுடைய கடவுச் சீட்டு

**06.** பரீட்சைத்திட்டம்:

இவ் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையானது தாபன விதிக் கோவையும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள் மற்றும் நிதிப்பிரமாணம் என்னும் இரண்டு கட்டுரை வினாத்தாள்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வினாத்தாளிற்கும் நேரம் - 03 மணித்தியாலங்கள், 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு விடயத்திற்கும் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஒரே அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையினை பூரணப்படுத்திக்கொள்ள முடியும். முதன்முறையாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அனைத்துப் பிரிவுகளிற்கும் விண்ணப்பிக்கவேண்டும்.

**07.** பரீட்சைப் பாடத்திட்டம்

7.1 **இவ் வினாத்தாள் ஆனது தாபன விதிக்கோவையின் கீழ் வரும் அத்தியாயங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள் மற்றும் நிதிப்பிரமாணம் எனும் இரண்டு வினாத்தாள்களை உள்ளடக்கியமைந்த கட்டுரை வினாக்கள் 08 ஐக் கொண்டுள்ளது. அதில் ஏதாவது 05 வினாக்களுக்கு விடையளிக்கவும். மொத்தப் புள்ளிகள் - 100 .**

❖ தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளை தழுவி தயாரிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| அத்தியாயம் | IV | - | மாதச் சம்பளம், தற்காலிக தகுதிநிலை, நிரந்தரத் தகுதிநிலை, ஓய்வூதிய உரிமை ஆகியவற்றை வழங்கல் |

❖ தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களை தழுவி தயாரிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| அத்தியாயம் | XII | - | விடுமுறை |
| அத்தியாயம் | XIII | - | புகையிரத ஆணைச்சீட்டு |
| அத்தியாயம் | XIV | - | தீவிற்குள்ளேயான கடமைப் பிரயாணம். |
| அத்தியாயம் | XIX | - | அரச இல்லம் |
| அத்தியாயம் | XLVII | - | சாதாரண நடத்தை மற்றும் ஒழுக்ம். |
| அத்தியாயம் | XLVIII | - | ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான ஒழுங்குவிதிகள். |

❖ அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள்

7.2. நிதிப் பிரமாணங்கள்

**இவ் வினாத்தாள் ஆனது கட்டுரை வினாக்கள் 08 ஐக் கொண்டுள்ளது. அதில் ஏதாவது 05 வினாக்களுக்கு விடையளிக்கவும். மொத்தப் புள்ளிகள் - 100 .**

அத்தியாயம் I - செலவு மற்றும் வருமான மதிப்பீடு திரட்டு நிதியம் வருடாந்த மதிப்பீடு , வருடாந்த மதிப்பீட்டில் திருத்தம்.
(நிதிப்பிரமாணங்கள் 1 - 68 )

அத்தியாயம் III - நிதி முகாமைத்துவமும், பொறுப்புக் கூறுதலும், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு வருமான கணக்கு உத்தியோகத்தர், கொடுப்பனவு தொடர்பாக அதிகாரமளித்தல், அங்கீகாரம் அளித்தல், சான்றுபடுத்தல், கடமையை கையளித்தல்.
(நிதிப்பிரமாணங்கள் 124 - 147)

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல்,

இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**09** **தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உங்களது பிரிவில் / விஷேட இயக்கத்தில் / நிறுவனத்தில் கடமையாற்றும் பொருத்தமான சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியத் தரவும். இந்த விபரங்களை <u>www.health.gov.lk</u> என்னும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.**

**கவனிக்கவும் : - சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்று நிருபங்களிடையே ஏதாவது ஒவ்வாமை காணப்படுமாயின் சிங்கள மொழியிலான சுற்று நிருபமே வலுவுள்ளதாகும்.**

**Chamika H. Gamage**
Deputy Director General (Administration)
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

சாமிக எச் கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் ( நிர்வாகம் ) **02**
செயலாளருக்காக,

**EXD**

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலகப் பாவனையின் பொரு...

**சுகாதார அமைச்சு (MT - 6) தரம் III செயற்கை அவயவ மற்றும் சார்பு உறுப்பு சிகிச்சையாளர்/நிபுணர் உத்தியோகத்தர்களுக்கான I வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2022 (இரண்டாம தடவை)**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில் எழுதவும்) ..............................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கப்பிட்டல் எழுத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் ( தமிழில்) ..............................................

(iv) முதலெழுத்துக்களுடன் பெயர்( ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) முதல் நியமனத் திகதி : ..............................................

(ii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் : ..............................................

(iii) தேசிய அடையாள அட்டை இல : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(iv) கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

(v) மின்னஞ்சல் முகவரி : ..............................................

02. தாங்கள் இம்முறை தோற்றுவதன் பொருட்டு எதிர்பார்த்துள்ள விடயத்தின் எதிரேயுள்ள கூண்டினுள் (√) அடையாளத்தினை இடுக. தோற்ற வில்லையாயின் (X) அடையாளமிடுக.

தாபன விதிக்கோவை மற்றும் அலுவலக நிர்வாக முறை மற்றும் தாபன விதிக்கோவை ☐

நிதிப்பிரமாணம் ☐

03. (அ) தற்போது சேவைபுரியும் நிலையம் (தமிழில்) ..............................................

(ஆங்கிலத்தில்)..............................................

(ஆ) அதற்குரிய மாவட்டம் ..............................................

(இ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது மத்திய அரசினால் ☐ மாகாண சபையினால் ☐

(ஈ) மாகாண சபையாயின் உரிய மாகாணம்..............................................

(உ) பரீட்சை அனுமதி அட்டையினை அனுப்புவதன் பொருட்டு பிழையின்றி தெளிவாக தங்களுடைய முகவரி எழுதப்பட்ட 9" X 4" அளவுடைய, ரூபா 45.00 பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட கடித உறைகள் இரண்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா? ..............................................

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்) ..............................................

..............................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்) ..............................................

..............................................

04. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) ..............................................

05. (அ) இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளீர்களா? ………………………………………………………………

(ஆ) தாங்கள் விண்ணப்பிப்பது முதற் தடவையில்லையாயின் முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ……………………..

முத்திரைக் கூண்டு

06 விண்ணப்பதாரியின் சான்றிதழ்

(i) எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும் இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப் பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதன் முறை அல்லாதபடியால் ரூபா …………………… பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் செய்வதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதார போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ……………………………… ……………………………………………..

விண்ணப்பதாரரின் கையொப்பம்

07 தனிநபர் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………… ……………………………………..

பெயர் பெயரும் கையொப்பமும், திகதியும்.

08 நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

திருவாளர்/திருமதி/செல்வி …………………………………………………… என்பவரை …………………. உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக உள்ளதால் / முதன் முறையாக இல்லாத படியால் ரூபா …………….. பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் / முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் , இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகைமை உள்ளதெனவும் எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ………………………………… ………………………………………………

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

09 பன்முகப்படுத்தப்பட்ட /விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்

திருவாளர் / திருமதி / செல்வி ……………………………………………. என்பவர் …………………… உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ………………………………

……………………………………………………………………

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி /விசேட பிரிவு தலைவரின் கையொப்பம்

இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்.

தேவையற்றனவற்றை கீறிடவும்